


தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' இணையதள உறுப்பினர் சேர்க்கை பயிற்ச்சி முகாம் பொன்னேரில் மற்றும் மீஞ்சூரில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், புதியதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வளைதளமுகவர்கள் (BDA). மற்றும் பாகமுகவர்கள் (BLA2) தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் அனைவரும் இணையதள உறுப்பினர் சேர்க்கை குறித்த காணொளி திரையிடப்பட்டு இணையதள உறுப்பினர் சேர்க்கை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது உடன் மு.பகலவன், பி.ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, பா.செ.குணசேகரன், பி.வெங்டாசலபதி, வெ.அன்புவணன், நா.செல்வசேகரன் வே.ஆனந்தகுமார், மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார், பி.முத்து, ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஆ.ராஜா, கா.சு.ஜெகதீசன், க.சு.தமிழ்உதயன் உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்



சென்னை தெற்கு மாவட்டம் திமுக சட்டத்துறை 2026 சட்டமன்றத் தேர்தல் பாசறை கூட்டம் – கிங்ஸ் கிராஸ் ரெசிடென்சியில் மாநிலச் செயலாளர் என் ஆர் இளங்கோ எம்பி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் மா. சுப்பிர மணியன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ் காரம்பாக்கம் கணபதி. ஏ எம் வி பிரபாகராஜா கே எஸ் ரவிச்சந்திரன் ஜே பச்சையப்பன் கே சந்துரு கே ஜே சரவணன் . எஸ். குணசேகரன் பாலவாக்கம் த. விஸ்வநாதன் எம் சி வேளச்சேரி எஸ் பாஸ்கரன் எம் சி பாலவாக்கம் மனோகரன் பா .வாசுகி பாண்டியன், வேளச்சேரி தொகுதி பொறுப்பாளர் சாய் ஜெயகாந்தன். மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஆர் பாலாஜி . துரை கபிலன் சு சேகர் இரா. துரைராஜ் எம் சி. எம் கிருஷ்ணமூர்த்தி எம் சி கே கண்ணன் எம். சி, மு ராஜா எஸ். வி. ரவிச்சந்திரன் எம் .சி ,வி. இ. மதியழகன் எம் .சி , நொளம்பூர். வே .ராஜன் ஜி. வெங்கடேசன், துரை வீரமணி வழக்கறிஞர் ம. தமிழரசு மு. தனசேகரன் வழக்கறிஞர் அணி அ . குருநாதன் மற்றும் வழக்கறிஞர் அணியை சார்ந்த நிர்வாகிகள் பெரும் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் முனைவர் த.ஜெகதீசன் ஏற்பாடு செய்தார்.

### துரோகிகளையும், போலிகளையும் வைத்துக்கொண்டு

# தமிழ்நாட்டை வீழ்த்த பாஜக நடத்தும் சதி ஒருபோதும் எடுபடாது!

## 'ஓரணியில் தமிழ்நாடு' பரப்புரை குறித்து அமைச்சர் சா.மு. நாசர் பேட்டி!

திருவள்ளூர், ஜூலை 2:

கழக தலைவர் 'ஓரணியில் தமிழ்நாடு' பரப்புரையைத் தொடங்கி வைத்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் ஒருங்கிணைந்த மாவட்ட திமுக சார்பில் செய்தியாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும் மத்திய மாவட்ட அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் செய்தியாளர்களிடம் பேசினார். இதில் மாவட்ட செயலாளர்கள் திருத்தணி எஸ் சந்திரன், வல்லூர் எம் எஸ் கே ரமேஷ் ராஜ் கலந்து கொண்டனர்.



அமைச்சர் சா.மு.நாசர் செய்தியாளர்களிடம் பேசிய போது, அடுத்த 45 நாட்களுக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்கள், நகரங்கள் மற்றும் வாக்குச்சாவடி மையங்களில் இந்த முழக்கம் ஒலிக்கும்.

இந்த பரப்புரையின் முக்கிய நோக்கம் திமுகவில் உறுப்பினர்களைச் சேர்ப்பது மட்டுமல்ல, தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் ஆகியவற்றைக் காக்க ஒவ்வொரு குடும்பத்தையும் ஒன்றிணைப்பதாகும்.

சாதி, மதம், அரசியல் பாகுபாடுகள் இல்லாமல் ஒவ்வொரு குடும்பத்தையும் அணுகி, தமிழ்நாட்டிற்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஒன்றிணைய வலியுறுத்தப்படும்.

பாஜக ஒரு பாசிச சக்தி என்றும், தமிழ்நாடு பாஜகவின் பிடியில் சிக்கினால் பெரும் ஆபத்து ஏற்படும். அதிமுக கூட்டணி இதற்கு துணை போவதாக குற்றம் சாட்டினார்.

பாஜக ஆளும் மாநிலங்கள் பாசிசத்தின் பரிசோதனைக் கூடங்களாக மாறி விட்டன. உத்தரப்பிரதேசம், பீகார் போன்ற வட மாநிலங்கள் தங்கள் தாய்மொழியை இழந்து இந்தியை மட்டுமே கற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

பொது சிவில் சட்டம் நாடு முழுவதும் அமல்படுத்த முடியாததால், பாஜக ஆளும் உத்தரகாண்டில் அதை அறிமுகப்படுத்தி பரிசோதனை செய்துள்ளனர்.

தமிழ்நாட்டையும் பாசிசத்தின் பரிசோதனைக் கூடமாக மாற்ற பாஜக முயற்சிக்கின்றது. இதை எதிர்க்க தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

துரோகிகளையும், போலிகளையும் வைத்துக்கொண்டு தமிழ்நாட்டை வீழ்த்த பாஜக நடத்தும் சதி ஒருபோதும் எடுபடாது என்பதை 'ஓரணியில் தமிழ்நாடு' மக்கள் இயக்கம் மூலம் சுட்டிக் காட்டப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்பத்தினரையும் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற குடையின் கீழ் ஒன்றிணைப்பதே இந்த பரப்புரையின் முக்கிய இலக்காகும்.

தமிழ்நாடு சமீபகாலமாக பண்பாடு, கலாச்சாரம், அரசியல் ரீதியாக அநீதிகளை சந்தித்து வருகிறது. கீழடி தொன்மையை அங்கீகரிக்க மறுப்பது, இந்தி திணிப்பு, கல்விக்கான நிதியை நிறுத்தி வைப்பது, மாநில உரிமைகளை அபகரிப்பது, நீட் தேர்வு மூலம் இளைஞர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என பல அநீதிகள் ஒன்றிய பாஜக அரசால் தமிழ்நாட்டிற்கு இழைக்கப்படுகின்றன.

மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பின் மூலம் தமிழ்நாட்டின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு ஆபத்து ஏற்பட்டு, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் குரல்வளையை நசுக்க முயற்சி நடப்பதாக குற்றம் சாட்டினார்.

தமிழ்நாடு இருளில் மூழ்கும் போதெல்லாம், மக்கள் ஒன்றிணைந்து ஒளியை மீட்டெடுத்துள்ளனர். அச்சுறுத்தல் வரும்போது ஒன்றுகூடி எதிர்கொள்வதும், ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுவதும் தமிழ்நாட்டின் எழுதப்படாத விதியாக உள்ளது.

மண், மொழி, மானம் காக்க மீண்டும் ஒன்றுகூட தமிழ்நாடு தயாராகிவிட்டது. சுயமரியாதையோடும், கண்ணியத்தோடும் வாழ வேண்டும் என்பதற்காக நம் முன்னோடிகள் போராடினர்.

இதன் தொடர்ச்சியை காக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்கள் கையில் உள்ளது. தமிழ்நாட்டின் கண்ணியம், சுயமரியாதை மற்றும் உரிமைகளைக் காக்க மீண்டும் போராட வேண்டிய தருணம் இது.

இந்த போராட்டம் நமக்கானது மட்டுமல்ல, நமது குழந்தைகளுக்கும், எதிர்கால தலைமுறைக்குமானது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் 'ஓரணியில் தமிழ்நாடு' முழக்கத்தை ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் கொண்டு செல்ல உள்ளோம்.

முதலமைச்சர் மேற்கொண்டுள்ள இந்த முன்னெடுப்புக்கு வலுசேர்க்கும் விதமாக இன்று (ஜூலை 2) மாவட்டத்தில் எம்.எல்.ஏக்கள், கட்சி நிர்வாகிகள், சார்பு அணியினருடன் இணைந்து பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. ஜூலை 3 ஆம் தேதி முதல் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று பரப்புரை மேற்கொள்ளப்படும்.

திமுக அனைத்து நிர்வாகிகளும் வாக்குச்சாவடியில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாக சென்று 'ஓரணியில் தமிழ்நாடு' இணைய வேண்டிய தன் அவசியத்தை எடுத்துரைப்பார்கள்.

இந்த முன்னெடுப்பின் முக்கிய அம்சமாக கட்சியின் பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் செயல்படுவார்கள்.

இவர்கள் பரப்புரை முழக்கத்தை கண்காணித்து பதிவு செய்யும் செயலியைக் கையாளும் திறன் கொண்டவர்கள். வாக்குச்சாவடி முகவர்களுடன் (பிஎல்ஏ2) இணைந்து பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் இந்த பரப்புரையை முன்னெடுத்துச் செல்வார்கள்.

இவர்கள் செயலியைக் கையாள பயிற்சி பெற்றவர்கள் மட்டுமல்லாமல், 'ஓரணியில் தமிழ்நாடு' முழக்கத்தின் முக்கிய செய்தி மற்றும் இலக்கு என்ன என்பதை ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் எடுத்துரைக்கும் திறன் கொண்டவர்கள்.

ஓரணியில் தமிழ்நாடு' முழக்கத்தோடு ஒத்துப்போகும் குடும்பத்தினர் தங்கள் ஆதரவைப் பதிவு செய்யலாம்.

வீடு வீடாக மேற்கொள்ளப்படும் இந்த பரப்புரை ஆகஸ்ட் மாத மத்தியில் நிறைவடையும்.

இது திமுகவுக்கான உறுப்பினர் சேர்க்கையாக மட்டுமே இருக்காது. தமிழ்நாட்டை பாதுகாக்க மக்களை ஒன்று திரட்டுவதே முக்கிய இலக்காக உள்ளது. இதன் மூலம் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த குடும்பத்தினர் உட்பட தமிழ்நாட்டில் உள்ள 100 சதவீத குடும்பத்தினரையும் சென்றடைந்து தமிழ்நாடு ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைப்போம்.

இவ்வாறு அமைச்சர் சா.மு. நாசர் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

### த. செந்தில்வேல், ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, சிறப்புரை!

# பெரம்பூர் தெற்கு பகுதியில் " ஓரணியில் தமிழ்நாடு" விளக்கப் பொதுக்கூட்டம்!

## டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி, கன்னிகை ஜி.ஸ்டாலின் பங்கேற்பு!

## பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் அறிவிப்பு!

சென்னை,ஜூலை.02-

பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைகிணங்க மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி சார்பில்"ஓரணியில் தமிழ்நாடு" விளக்கப் பொதுக்கூட்டம் 02.07.2025 மாலை 6:00 மணிக்குபழநியாண்டவர் கோயில் தெருவில் பகுதி செயலாளர் க.ஜெயராமன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டதிற்கு த. ஆறுமுகம் 44வது வட்ட செயலாளர் முன்னிலை: இரா நரேந்திரன், வி தயாளன், சர்பஜெயதாஸ் எம்.சி. பகுதி நிர்வாகிகள்: மு சாகுல் அமீது, எஸ் சாக்ரடீஸ், வி.வேதா, ஆர் ஜோதிமணி வட்ட செயலாளர்கள்: ஏ. ஆர்.ஆர். மலைச்சாமி எம்.சி., க.பாபு, எஸ்.அருள், ஜி. மாரிமுத்து, கேபிள் கே. தினகரன், வி. முருகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் ஊடகவியலாளர் தி.செந்தில்வேல், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி., கன்னிகை ஜி ஸ்டாலின், அ. முருகன், இரா.கருணாநிதி, எஸ். ஆர். கமலகண்ணன், அ.தமிழ்ச்செல்வன், டி.கமலகண்ணன், ப.மதிவாணன், க.அமுல், சி.ஆனந்தி எம்.சி., சர்மிளா காந்தி எம்.சி., நா. சேகர் முன்னாள் எம்.சி வடக்கு வட்டம் செயலாளர்கள்: கே.வி.ராஜன், என். கார்த்திபன், மு. உமாபதி,இரா. அரிதாஸ், கே.இ செந்தமிழரசு, சி.எஸ். ரவி, மாவட்ட பிரதிநிதிகள்: கி. இராஜி, பி.சண்முகம், கு. பரத்,இரா. முரளிதரன், ந.வீரமுத்து, எம்.மனோகரன, எஸ்.செபாஸ்டியன், எஸ்.சச்சிதானந்தம் , அணிகள் அமைப்பாளர்கள்: கோ. சதீஸ், ஜி.பி.மோகன்பாபு,த. சிவராமன், கே.ஓ.கலையரசன், வெ. இன்ப, கூல் பாயிண்ட் பிரகாஷ், எம்.ஆர்.டி. அப்துல் ரகுமான், வை. கௌதமன, சூல் சூன் சி.சுரேஷ், எம்..சுந்தரி, வைலட் ராணி , அணிகளின் மாவட்ட , பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக செயல்வீரர்கள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றியுரை : வி.எஸ். பிரபு பகுதி பொருளாளர்

இவ்வாறு தெற்கு பகுதி செயலாளர் க. ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

### தாம்பரம் சட்டமன்றத் தொகுதி

## பாகநிலை முகவர்கள் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) APP மூலம் உறுப்பினர் சேர்க்கைக்கான பயிற்சி கூட்டம்!

**மாநகரச் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.,அறிவிப்பு**



கழகதலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு, கழக உறுப்பினர்கள் சேர்ப்பு பணியின் கீழ் வீடு, வீடாக சென்று கழக உறுப்பினர்கள் சேர்க்கையின் போது APP மூலம் உறுப்பினர்கள் பதிவு செய்யும் விவரங்களை உள்ளீடு செய்வது தொடர்பாக. வருகின்ற 03-07-2025 வியாழக்கிழமை, மாலை கீழ்காணும் அட்டவணைப்படி

| நேரம் | இடம் | பகுதி |
|---|---|---|
| மாலை 04.00 மணிக்கு | வாசுதேவாதிருமண மண்டபம், கேம்ப் ரோடு, கிழக்கு தாம்பரம், சேலையூர் | செம்பாக்கம் தெற்கு |
| | | தாம்பரம் கிழக்கு |
| | | புனிததோமையார் மலை வடக்கு ஒன்றியம் |
| மாலை 06.00 மணிக்கு | கோண் கிருஷ்ணா திருமணமண்டபம், முடிச்சூர் ரோடு, மேற்கு தாம்பரம். | பெருங்களத்தூர் வடக்கு |
| | | பெருங்களத்தூர் தெற்கு |
| | | தாம்பரம் மேற்கு |

பாக நிலைமுகவர்கள் (பி.எல்.ஏ.2) பூத் டிஜிட்டல்ஏஜென்ட் (பி.டி.ஏ) APP மூலம் உறுப்பினர் சேர்க்கைக்கான பயிற்சிக் கூட்டம் எனது தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்சொன்ன நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றிய கழகச் செயலாளர், தங்களுக்குட்பட்ட வட்ட கழகச் செயலாளர்கள், பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (பி.டி.ஏ.) ஆகியோர்களுக்கு தகவல் தெரிவித்து, இக்கூட்டத்தில் கலந்து கொள்ள செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: 1. குறித்த நேரத்தில் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும்.

**எஸ்.ஆர்.ராஜா** எம்.எல்.ஏ.,
தாம்பரம் மாநகரகழகச் செயலாளர்

### மயிலை த.வேலு – ஜெ.கருணாநிதி – கே.ஏழுமலை – ரத்னா லோகேஸ்வரன் – ராஜா அன்பழகன் பங்கேற்பு!

# தியாகராயர் நகர் 141(அ) வட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் எஸ்.லட்சுமி காந்தன் அறிக்கை!

சென்னை, ஜூலை 2-

தியாகராயர் நகர் 141 (அ) வட்டச் செயலாளர் எஸ். லட்சுமி காந்தன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 141 'அ' வட்ட தி.மு.க. பாக முகவர்கள் (B.L.A,2) பாக உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம், இன்று (02.07.2025 புதன் கிழமை) மாலை 6 மணி அளவில், சி.ஐ.டி. நகர் 4-வது பிரதான சாலையில் அமைந்துள்ள இராஜாஜி சேவா சங்க கட்டிடத்தில் நடைபெறுகிறது.

வட்ட கிளை கழக செயலாளர் வழக்கறிஞர் எஸ்.லட்சுமிகாந்தன் தலைமையில், மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மற்றும் தியாராயநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாராயநகர் தொகுதி பார்வையாளர் திருமதி. ரத்னா லோகேஸ்வரன், தலைமை செயற்குழு உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி., சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிர், தொண்டர் அணி அமைப்பாளர் திருமதி. மோனிஷா கருணாநிதி, முன்னாள் வட்ட கிளை கழக செயலாளர் ஆ.ஏழுமலை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

எனவே வட்ட கழகத்தை சார்ந்த பாகம் பொறுப்பாளர்கள், (B.L.A,2), பாக உறுப்பினர்கள் (B.L.C), (B.D.A) உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின், மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழகத்தை சார்ந்த இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், மற்றும் ஆற்றல் மிக்க செயல்வீரர்கள், மகளிர் அணியைச் சார்ந்த வீராங்கனைகள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் எஸ்.லட்சுமிகாந்தன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.




சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வேண்டுகோளுக்கிணங்க, தியாகராயர் நகர் மேற்குப் பகுதி 132 வது வட்டத்தில் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கூட்டம் வட்டக் கழக செயலாளர் ந.மோ. முரளி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை, தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் வழங்கினர். கோடம்பாக்கம் மு.சத்யா, சா.தேவராசு மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் தொகுதி BOOTH DIGITAL AGENT( BDA) பயிற்சி கூட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கழக உறுப்பினர்களுக்கு பயிற்சி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் நடைபெற்றது. இதில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் எஸ்.மோகன், தி.மு. தனியரசு, வை.மா.அருள்தாசன், ஏ.வி.ஆறுமுகம், வீ.கவி கணேசன், குறிஞ்சி எஸ்.கணேசன், வி.ராமநாதன், டி.ராமகிருஷ்ணன், டி.ஏ.ராஜி, இரா.முருகேசன், சாந்தி பக்தன், எஸ்.ஏ.சீனிவாசன், ராஜேஷ், விக்னேஷ், சி.லிங்கேஸ்சன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.